# மது வரித் திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மது வரித் திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது வாகனங்களுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கங்கள் ரூபா 285,000 தொகை குறைவாகக் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்ட காரணத்தினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தினால் குறைவாகவும் நிலையான சொத்துக்களின் பெறுமதி அப்பெறுமானத்தினால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 7 வாகனங்களை மெருகூட்டுவதற்காக (மேல் மூடிகளைப் பொருத்துதல்) ஏற்பட்ட ரூபா 652,750 தொகையானது மூலதனமற்ற செலவினமாகப் பதிவழிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் மற்றும் நிலையான சொத்துக்கள் (வாகனம்) என்பன அப்பெறுமானத்தினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு | புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் கீழ், அறவிடப்படும் தண்டப் பணத்தில் 25% வெகுமதிகளாக வழங்க வேண்டியுள்ளதுடன் இதற்காக அதிகார சட்டத்தின் 17(ii) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சர் பரிந்துரைக்கும் முறைப்படி மது வரி ஆணையாளர் நாயகத்தினது கட்டுபாட்டின் கீழ் பேணப்படும் வெகுமதி நிதியம் ஒன்று நிறுவப்பட வேண்டிய போதிலும் அத்தகைய நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நி.பி 272(1) | கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச் சீட்டுக்கள் தொடர் இலக்கமிடப்பட்டு பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தொடர் இலக்கத்தின் பிரகாரம் கோவைப்படுத்தப்பட்டு கட்டப்பட்டிருக்கவில்லை. |

(ii) நி.பி 756 — நிதியாண்டு முடிவுற்றதை உடனடுத்து நிதியத்திடமுள்ள சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று நடாத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 23,361,469 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

-

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 17,245,710 தொகையான தேறிய மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் தேறிய மிகை ரூபா 41,228,732 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 23,983,022 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. மொத்தப் பெறுவனவுகள் ரூபா 24,387,872 தொகை அதாவது 20% ஆல் குறைவடைந்தமை வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் தொழில்நுட்ப தண்டம் மற்றும் மது வரி தண்டம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட சுற்றறிவளைப்புக்களின் எண்ணிக்கை 5,292 மற்றும் 43,555 ஆகவும் இருந்த போதிலும் உள்ளவாறான சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை 4,597 மற்றும் 40,738 ஆகவும் இருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டின் மொத்தக் கட்டண வருமானத்தில் ரூபா 17,705,872 தொகை அல்லது 16% உம், புகையிலை வரி வருமானத்தில் ரூபா 6,682,000 தொகை அல்லது 65% ஆன குறைவொன்றும் காணப்பட்டன.

(இ) திணைக்களத்தின் நோக்கத்திற்காக நேரடியாகத் தாக்கமளிக்கும் உத்தியோகத்தர்களின் செயலாற்றல்களை மேம்படுத்தும் படிமுறைகளுக்காக பயிற்சியளித்தல் செயற்பாடுகளுக்காகவும், மொத்தச் செலவில் நிதியத்தின் பங்களிப்பு ஆகக் குறைந்த மட்டத்தில் இருந்தது.

## 4. கணக்களிப்பும் நல்ல ஆளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

நிதியத்தின் நோக்கு மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விஷேட கடமைகள் அல்லது விஷேட சுற்றிவளைப்புக்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் ஏனையவைகளையும் கொள்வனவு செய்வதற்காக பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 600,000 உம் ரூபா 11,000,000 தொகையான செலவினங்களில் ரூபா 512,330 மற்றும் ரூபா 6,933,503 அதாவது 85% மற்றும் 63% என்பன சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வினோத விளையாட்டுக்கள் அல்லது விஷேட சுற்றிவளைப்புக்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 50,000 படியும், மெச்சல் வேலைகள், பயிற்சியளித்தல் மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளுக்காக ரூபா 500,000 தொகையும் துணிச்சல் வேலைகள் அல்லது விசேட ஏற்றல்கள் செயற்பாடுகளின் கொடுப்பனவுகளுக்காக ரூபா 200,000 படியும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இம் மொத்த நிதித் தொகையும் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. 801 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் மெச்சல் வேலைகள், துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றல்களைப் பெறக்கூடிய ஏனைய செயற்பாடுகளுக்கு வெகுமதி நிதியத்திலிருந்து செலுத்தும் முறைமையொன்று இது வரையும் அமுல்படுத்தப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் அதற்காக மேற்கூறப்பட்ட பிரகாரம் ரூபா 200,000 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுபாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மது வரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழான வெகுமதி நிதியம் ஸ்தாபிக்கப்படுதல்.

(இ) பொருள் மெய்மையாய்வு